

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.1.2026) சென்னை நேப்பியர் பாலம் கூவம் முகத்துவாரம் அருகில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் நீர்த்தேக்கங்களுக்கான நீரியல் தரவு கண்காணிப்பு மற்றும் நீர்த்தேக்க மேலாண்மை தீர்வுத்திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மேலாண்மை மைய கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் துரைமுருகன், பி.கே. சேகர்பாபு, நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர்கள், மற்றும் பொறியாளர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.1.2026) சென்னை நேப்பியர் பாலம் கூவம் முகத்துவாரம் அருகில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் நீர்த்தேக்கங்களுக்கான நீரியல் தரவு கண்காணிப்பு மற்றும் நீர்த்தேக்க மேலாண்மை தீர்வு திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மேலாண்மை மைய கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் துரைமுருகன், பி.கே. சேகர்பாபு, நீர்வளத் துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நீர்வளத் துறை தலைமைப் பொறியாளர்கள், மற்றும் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

### முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா

# ‘இது நம்ம ஆட்டம் 2026’ போட்டிக்கான இணையதள முன்பதிவு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.8-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படவுள்ள முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா - ‘இது நம்ம ஆட்டம் 2026’ போட்டிகளுக்கான இணையதள முன்பதிவினை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இளைய தலைமுறையினரின் சமூக முன்னேற்றம், உடற்கல்வி, விளையாட்டு, சமூக இணைப்பு மற்றும் உடல்-மன ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் நோக்கில் 22.1.2026 முதல் 8.2.2026 வரை தமிழ்நாடு முழுவதும் ஊராட்சி ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா - ‘இது நம்ம ஆட்டம் 2026’ போட்டிகள் நடத்த உத்தரவிட்டுள்ளார்.

ஊராட்சி ஒன்றிய அளவில் தனி நபர் மற்றும் குழுப் போட்டிகளில் முதல் இடம் பெறுபவருக்கு தலா ரூ.3,000/- பரிசுத் தொகையும், இரண்டாம் இடம் பெறுபவருக்கு தலா ரூ.2,000/- மற்றும் மூன்றாம் இடம் பெறுபவருக்கு தலா ரூ.1,000/- பரிசுத் தொகையும், மாவட்ட அளவில் தனி நபர் மற்றும் குழுப் போட்டிகளில் முதல் இடம் பெறுபவருக்கு தலா ரூ.6,000/- பரிசுத் தொகையும், இரண்டாம் இடம் பெறுபவருக்கு தலா ரூ.4,000/- மற்றும் மூன்றாம் இடம் பெறுபவருக்கு தலா ரூ.2,000/- பரிசுத் தொகையும், மாநில அளவில், அணி பிரிவில் முதல் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.75,000/- பரிசுத் தொகையும், இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.50,000/- மற்றும் மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.25,000/- பரிசுத்தொகையும் வழங்கப்பட உள்ளது.

இதற்காக முதலமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றிய அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசு தொகையாக மொத்தம் 16,52,88,000 ரூபாயும், மாவட்ட அளவில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசு தொகையாக மொத்



தம் 3,72,96,000 ரூபாயும், மாநில அளவில் நடைபெறும் போட்டிகளுக்குப் பரிசு தொகையாக மொத்தம் 22,50,000 ரூபாயும் என மொத்த பரிசு தொகையாக 20,48,34,000 ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார் .

தமிழ்நாடு முழுவதும் உள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களில் 16 வயது முதல் 35 வயது வரையிலான தகுதியுடைய அனைத்து இளைஞர்களும் பங்கேற்கும் வகையில் ஒன்றிய அளவிலான போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் முதல் இடம் பெறும் வீரர், வீராங்கனைகள் மற்றும் அணிகள் மட்டுமே மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெறுவர். ஊராட்சி ஒன்றிய மற்றும் மாவட்ட அளவில் தடகளம் - 100 மீட்டர் மற்றும் குண்டு எறிதல், கபாடி, வாலிபால், கேரம், கயிறு இழுத்தல் போட்டி, ஸ்ட்ரீட் கிரிக்கெட் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

மேலும் மாவட்ட அளவில் ஓவியம், கோலப்போட்டிகள் மற்றும் உடல்சார் மாற்றுத்திறனாளிகளுக்கு 100 மீட்டர் ஓட்டமும், பார்வைசார் மாற்றுத்திறனாளிகளுக்கு குண்டு எறிதல் போட்டியும், அறிவுசார் மாற்றுத் திறனாளிகளுக்கு 100 மீட்டர் ஓட்டமும் அதேபோன்று செவிசார் மாற்றுத்திறனாளிகளுக்கு 100 மீட்டர் ஓட்டமும் என மாற்றுத்திறனாளிகளுக்கு 4 பிரிவுகளாகவும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மாவட்ட அளவில் முதலிடத்தை பெறும் பெண்களுக்கான கபாடி அணி மற்றும் ஆண்களுக்கான ஸ்ட்ரீட் கிரிக்கெட் அணியினர்களுக்கு மட்டும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா - ‘இது நம்ம ஆட்டம் 2026’ போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் 16 வயது முதல் 35 வயதுடைய விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான www.sdat.tn.gov.in / www.cmyouthfestival.sdat.in வாயிலாக 6.1.2026 முதல் முன்பதிவு செய்து தனி நபர் மற்றும் குழுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். முன்பதிவு செய்திட கடைசி நாள் 21.1.2026 ஆகும்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படவுள்ள முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா - ‘இது நம்ம ஆட்டம் 2026’ போட்டிகளுக்கான இணையதள முன்பதிவினை நேற்று முன்தினம் (6.1.2026) தொடங்கி வைத்தார்.

இந்த முன்பதிவினை விளையாட்டு வீரர்கள் தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ அல்லது தங்கள் கிராம ஊராட்சி மற்றும் மாவட்டத்தின் வாயிலாக செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின் மாவட்ட அலுவலகங்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். மேலும், ஆடுகளம் தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 9514 000 777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை தொடங்கி வைக்கிறார்!

# “உங்கள் கனவைச் சொல்லுங்கள்” - கழக அரசின் புதிய திட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

**சென்னை, ஜன.8-**

**பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று முன்தினம் (06.01.2026) சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.**

இதில் அவர் குறிப்பிட்டதாவது:-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பொதுவாக அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு செய்தியாளர்களைக் காண்பது வழக்கம் கிடையாது. ஏனென்றால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற ஒரு அமைச்சரவைக் கூட்டம். ரகசியமாக இருக்கக்கூடிய பொருள்களைச் சார்ந்துதான் நாங்கள் கலந்துரையாடுவோம். அது எங்களுக்குள்ளாகவே முடிந்துவிடும். ஆனால் முதன்முதலாக அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு செய்தியாளர்களைக் காண வந்திருக்கிறோம் என்றால், முதலமைச்சர் அவர்களின் எண்ணத்தில் உதித்த ஒரு திட்டம் சார்ந்த மக்களிடம் கொண்டு செல்லவேண்டும் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையில்தான்.

குறிப்பாக அந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சொன்னது என்பது, மக்களாட்சி என்பது குடிமக்களின் கனவுகளை நனவாக்க, கருவியாக ஒரு அரசு செயல்படுவது தான் மக்களாட்சி என்று சொல்கிறார்கள். என்ன திட்டம் முதலமைச்சர் அவர்கள் சொல்லப் போகிறார் என்று நாங்கள் எல்லாம் பார்த்தபோது, இன்றைக்குத் தொடர்ந்து நாம் நான்கரை வருடமாக ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறோம். நான்கு வருடமாக இருக்கிறோம் என்பது நடுவில், நமக்கு நாடாளுமன்றத் தேர்தல் வந்தது, உள்ளாட்சி அமைப்பைச் சார்ந்த தேர்தல் வந்தது, இடைத்தேர்தல்கள் வந்தது, SIR பணிகள் காரணமாக அதிகாரிகளின் அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள் ஒட்டுமொத்தமாக மூன்று வருஷத்தில் நாம் எவ்வளவு சாதித்திருக்கிறோம் என்று பார்க்க முடிகிறது.

2021ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு கொரோனா தொற்றிலிருந்து நாம் மீள்வதற்கே எத்தனை மாதங்கள் ஆனது என்பதையெல்லாம் பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்த நண்பர்களுக்கு உங்களுக்கெல்லாம் தெரியும்.

**பொருளாதார இலக்கு!**

இன்றைக்கு அதையெல்லாம் கடந்து முதலமைச்சர் பொருளாதார இலக்கை இரட்டை இலக்கு எந்தளவுக்கு ஒட்டுமொத்த இந்தியாவிலேயே நம்பர் 1 ஸ்டேட்டாக இன்றைக்கு குறிப்பாக சூப்பர் ஸ்டார் ஸ்டேட் என்று சொல்கின்ற அளவுக்கு பெயரை நாம் பெற்றிருக்கின்றோம். அவர் பேசும்போது, இது மட்டும் போதுமா? இன்னும் செய்யவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார். அதனடிப்படையில் தான், பல நிதி நெருக்கடி இருந்தாலும் பல்வேறு திட்டங்களை சார்ந்த, ஒரே ஒரு பேருந்தை மட்டும் எடுத்துக் கொண்டால், அந்தத் திட்டத்தின் ஒரு டிராவலாகவே நீங்கள் பார்க்கலாம். விடியல் பயணத் திட்டத்தின் மூலமாக அந்த பேருந்தில் பயணம் செய்கின்ற ஒரு இளைய சமுதாயம் - என்னுடைய தம்பி தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் வாங்கக்கூடிய தம்பி இந்த பேருந்தில் போகிறார் - புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் வாங்கக்கூடிய என்னுடைய தங்கை அந்தப் பேருந்தில் பயணம் செய்கிறார்கள் - நேற்றிலிருந்து அவருடைய கடைசி வருட மாணவன் என்று சொன்னால், அவர்களுடைய மடியில் மடிக்கணினியும் இருக்கப் போகிறது.

அதே பேருந்தில் காலை உணவுத் திட்டத்தின் மூலமாக தன்னுடைய குழந்தையை அழைத்துச் செல்லக்கூடிய தாய்மார்கள், கலைஞர் உரிமைத் தொகை பெறும் ஆயிரம் ரூபாய் பெறுகின்ற அந்தத் தாய்மார்கள் பேருந்தில் பயணிக்கிறார்கள். அந்தப் பேருந்தில் கிராமம் வாரியாக நீங்கள் போகும்போது சாலைகள் நன்றாக இருக்கின்றது - ஏன், முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக - அந்தப் பேருந்தில் நீங்கள் போகும்போது, சைடில் நீங்கள் பார்த்துக் கொண்டு வரும்போது, கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் பார்க்கும்போது, ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மற்றொரு பக்கம் பார்க்கும் போது, ‘நலன் காக்கும் ஸ்டாலின்’ முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ‘அன்புக் கரங்கள்’ திட்டம், ’தாயுமானவர் திட்டம்’ என்று ஒவ்வொரு திட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பார்த்து, மற்ற மாநிலங்கள் நாமும் இதுபோன்ற திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்கிறார்கள்.

**நமக்கெல்லாம் பெருமை!**

ஒரு விடியல் பயணத்தின் மூலமாக கொண்டு வருகின்ற திட்டங்கள் எல்லாம் எப்படி கொண்டு வருகிறோம் - மக்களுடைய அந்தப் பணத்தின் மூலமாக பயனுள்ள திட்டத்தை மீண்டும் மக்களுக்கே நாங்கள் தருவதைப் பார்க்கிறீர்களா? அல்லது பயனற்ற திட்டங்களை சில பேர் செய்துவிட்டு, வீண் விரையம் செய்தார்களே அதை நீங்கள் பார்க்கப் போகிறீர்களா? தமிழ்நாடு முதலமைச்சர் சொன்னது போல, நல்லது ஒரு பக்கம், கெட்டது ஒரு பக்கம் இருக்கும் - எதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். எங்களைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டு மக்கள் தரப்போகின்ற பணத்தின் மூலமாக பயனுள்ள திட்டங்களை வழங்கவேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகிறோம். இந்தத் திட்டங்களை எல்லாம் செய்து, இன்றைக்கு மிகப் பெரிய foundation நாம் கொண்டு வந்திருக்கிறோம் - அந்த foundationன் அடுத்த கட்டமாக அந்த transformation என்பது ஒரு வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதற்காகத் தான் GDPஆக இருந்தாலும், GSDPஆக இருந்தாலும் வளர்ச்சியை நோக்கி நாம் கொஞ்சம், கொஞ்சமாகச் சென்று கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்கள், ஏன் மற்ற நாடுகள் எல்லாம் உற்று நோக்குகின்ற மாநிலமாக நம்முடைய மாநிலம் இன்றைக்கு மாறிக்கொண்டிருக்கிறது. நமக்கெல்லாம் ஒரு பெருமை!

**குடும்பத்தின் கனவு!**

அடுத்த கட்டம் என்ன செய்யலாம்? இதுவரைக்கும் எந்த ஒரு அரசாங்கமும் செய்யாத ஒரு வரலாற்று நிகழ்வாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குச் சொன்னது - “உங்க கனவு சொல்லுங்கள்”. நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் எம்.கே.எஸ்., இந்த நாட்டிற்கு வழங்கக்கூடிய UKS திட்டமாக நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்.

“உங்க கனவைச் சொல்லுங்கள்” என்றால்



என்ன? ஒவ்வொரு குடும்பமும் சார்ந்து ஒரு கனவு இருக்கும் - தனக்கு என்ன வேண்டும் - தன்னுடைய ஊருக்கு என்ன வேண்டும் - தன்னுடைய நாட்டுக்கு என்ன வேண்டும் - உதாரணத்திற்கு, வெளிநாட்டிற்குச் செல்லும் போது, நாம் ஒப்பிட்டுப் பார்த்துச் சொல்வோம் - சாலைகள் எல்லாம் மிகவும் அருமையாக இருக்கின்றன - மிகவும் ஒழுங்காக, டிராஃபிக்கை பின்பற்றுகிறோம் - குப்பையே இல்லை என்று நாம் சொல்வோம். ஆனால், அது போன்று என்னுடைய ஊர் வேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு இருக்கும் அரசாங்கம் சார்ந்த திட்டங்கள் அதன் கொள்கையைச் சார்ந்து போய்க் கொண்டிருக்கும் - என்னுடைய மாநிலம் எப்படி இருக்கவேண்டும் என்றால் என்று ஆசைப்படலாம் - “உங்க கனவு சொல்லுங்கள்” என்பது ஒரு குடும்பத்தைச் சார்ந்தது என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதைச் செய்திட வேண்டும்; கேட்டிட வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். கிட்டத்தட்ட 1 கோடியே 91 இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றது - கிட்டத்தட்ட 24 ஆயிரம் குடியிருப்புகள் இருக்கின்றது - “உங்கள் கனவு சொல்லுங்கள்” திட்டம் என்பது ஒரு குடும்பத்தின் கனவாக என்னவாக இருக்கின்றது என்று தெரிந்துகொள்ள வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகிறோம்.

பலமுகாம்கள் அமைக்கப்பட்டது - பலவிதக் கோரிக்கைகள் தீர்த்துக் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம் - இதற்காக 50 ஆயிரம் தன்னார்வலர்களை நாங்கள் பயிற்சி கொடுக்கப்பட்டு, தன்னார்வலர்களுக்கென்று ஒருசில விண்ணப்பங்கள் வைத்திருக்கிறோம் - தன்னார்வலர்கள் அந்த விண்ணப்பங்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, அவர்களைச் சார்ந்த விவரங்களை வாங்கிக் கொள்ளவேண்டும். கிட்டத்தட்ட 10 வகையான திட்டங்களில் நீங்கள் எவற்றில் எல்லாம் பயன் பெறுகிறீர்கள் என்று நாங்கள் கேட்கப் போகிறோம்.

**மூன்று கனவுகள்!**

அதுமட்டுமல்லாமல், மூன்று கனவுகள் - இது எல்லாம் இருந்தால் நீங்கள் எதை நினைக்கிறீர்கள் - முத்தாய்ப்பான முதல் மூன்றைச் சொல்லுங்கள் என்றால், அதில் நீங்கள் “Tick” செய்ய வேண்டும் நாங்கள் சொல்வோம். இந்த follow up முடிந்த பிறகு, இரண்டு நாட்களுக்குப் பிறகு நாங்கள் மீண்டும் அதே குடும்பத்தில் உள்ளவர்களிடம் சென்று, அந்த விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்துவிட்டீர்களா? என்று கேட்போம். அவர்களுடைய ஆதார் நம்பர், கையெழுத்து எல்லாம் பூர்த்தி செய்த பிறகு, நாங்கள் கொண்டு செல்கின்ற செயலின் மூலமாக முழுமையாகப் பதிவு செய்த பிறகு, ஒரு நம்பர் generate ஆகும் - ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு யூனிக் ID இருக்கும் - அந்த யூனிக் ID generate ஆனவுடன், இதுபோன்ற கனவு அட்டை மூலமாக அந்த நம்பரைப் பூர்த்தி செய்து விட்டு, அந்தக் கனவு அட்டையை நாங்கள் கொடுத்துவிடுவோம். இது ஒரு கட்டமாக நடைபெறும்.

அதே குடும்பத்தில் ஒரு இளைஞர் இருப்பார் - நான் இளைஞன் - என்னுடைய கனவு, என்னுடைய எதிர்காலம், எனக்கு என்று சில எதிர்பார்ப்புகள் இருக்கும் என்று அந்த இளைஞர் சொல்வார். அந்த இளைஞனைச் சார்ந்து, குறிப்பாக, 15 முதல் 29 வரை இருக்கின்ற அந்த இளைஞனின் கனவு என்னவாக இருக்கும் - முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்கள், இளைய சமுதாயம் சார்ந்த, மாணவர்களைச் சார்ந்த, கல்லூரி மாணவர்களைச் சார்ந்து நாம் செய்து கொண்டிருக்கும்போது, அவர்களுக்கென்று ஒரு கனவு இருக்கும் - அந்தக் கனவு என்னவாக இருக்கப் போகிறது? என்பதை நாங்கள் கேட்கப் போகிறோம். அவர்களுக்கு விண்ணப்பம் வழங்கப் போகிறீர்களா? இல்லை - இணையதளத்தின் மூலமாக அவர்களுக்கு என்ன தேவை என்பதெல்லாம், 500 வாகனங்கள் மூலமாகவும், ஊடகம் சார்ந்து ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்துவது, DIPR மூலமாக பத்திரிகைச் செய்தியின் மூலமாக எடுத்துச் செல்வது என்று எல்லோரிடமும் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப் போகிறோம்.

நம்முடைய ஊரில் படித்துவிட்டு, வெளிநாட்டிற்குச் சென்று ஒரு தொழிலதிபராக இருக்கக்கூடிய அயலகத்தில் தமிழர்கள் இருப்பார்கள். இந்த ஜனவரி மாதம் 12ஆம் தேதி அயலக தினம் நாம் கொண்டாடப் போகிறோம். பொதுவாக, ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர், துணை முதலமைச்சர் அவர்களும் கலந்து கொள்வார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் எல்லாம் பல்வேறு நாடுகளிலிருந்து கலந்து கொள்ளும்போது, அவர்களுடைய கனவெல்லாம் என்னவாக இருக்கின்றது? அதற்காகத் தனியாக 5 பேர் கொண்ட தன்னார்வலர்கள் மூலமாக, நடைபெறுகின்ற அந்தக் கருத்தரங்கத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்களிடம் முழுமையாக அதனை வழங்குவார்கள். என்னுடைய கனவு நான் இருந்த ஊர், நான் செட்டில் ஆனாலும் கூட “என்னுடைய ஊர் இது போன்று இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்” என்று அவர்கள் என்ன சொல்கிறார்களோ, அந்தக் கனவை எல்லாம் முழுமையாக நாங்கள் எடுத்துக் கொள்ளப்போகிறோம்.

**கருத்தரங்குகள்!**

அதுமட்டுமல்லாமல், என்னுடைய ஊர் திருச்சி - என்னுடைய மாவட்டம் இப்படி எல்லாம் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன் - அது சார்ந்து வரும்போது, கிட்டத்தட்ட அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒரு ஆட்சியர் தலைமையில் ஒரு கருத்தரங்கு - என்னுடைய மாவட்டத்தில் யார் சாதனை புரிந்திருக்கிறார்கள் - என்னுடைய மாவட்டம் வளர்ச்சி பெறுவதற்கு யார் யாரெல்லாம் பங்களித்திருக்கிறார்கள் - அவர்களை எல்லாம் வரவழைத்து சாதனையாளர்களை அங்கேயே பாராட்டி, கௌரவித்து அங்கீகரிப்பது மட்டுமல்லாமல், அந்த மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களிடம் அமர்ந்து, “சொல்லுங்கள் - என்னென்ன செய்யலாம், என்று நீங்கள் நினைக்கிறீர்கள்” என்று அவர்களின் கருத்தைக் கேட்கக்கூடிய அந்தக் கூட்டத்தையும் நாங்கள் முழுமையாக நடத்தப் போகிறோம்.

அதுமட்டுமல்லாமல், கருப்பொருட்கள் சார்ந்திருக்கக்கூடிய அந்த அறிஞர்களை எல்லாம் வரவழைத்து, அவர்களிடம் ஒரு கருத்தரங்கம் நடத்தப் போகிறோம். உதாரணத்திற்கு ஒரு கிராமப் பகுதியைச் சார்ந்திருக்கக்கூடிய உட்கட்டமைப்பு - நகர்ப்புறம் சார்ந்திருக்கக்கூடிய ஒரு உட்கட்டமைப்பு - கல்வியும், எங்களுடைய திறன்கள் சார்ந்திருக்கக்கூடிய செய்திகளைச் சொல்லக்கூடிய அவர்கள் யார் யாரெல்லாம் இருக்கப் போகிறார்கள்? மீன்பிடி மற்றும் விவசாயம் என்று வரும்போது, அதைச் சார்ந்து என்ன கருத்துக்களை நாம் உள்வாங்கிக் கொள்ளலாம் வேலைவாய்ப்பு, தொழிற்சாலை என்று வரும்போது அதைச் சார்ந்து நாம் என்ன செய்திகள் எல்லாம் பெறலாம் - நம்முடைய மொழி, பண்பாடு சார்ந்து நாம் என்னென்ன செய்திகள் எல்லாம் பெறலாம் - கிட்டத்தட்ட ஏழு விதமான இந்த content மூலமாக கருத்தரங்குகள் நடத்தப்படும்.

எல்லோருக்கும் எல்லாம் தெரியாது. ஒவ்வொருவரும் ஒவ்வொன்றிலும் ‘எக்ஸ்பெர்ட்’ ஆக இருக்கும்போது அவர்களிடமிருந்து கருத்துகளைப் பெற்றுகொள்ள வேண்டும். உங்களுக்குத் தெரியும். முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரைக்கும், வேளாண் பட்ஜெட் வந்தால் கூட அங்கிருக்கும் விவசாயச் சங்கங்களிடம் கேட்டு அதன் மூலமாக அந்த பட்ஜெட்டை கொண்டுவர வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

நாங்கள் மாநிலக் கல்விக் கொள்கை கொண்டுவருவதற்கு முன்பாக பல்வேறு பகுதிகளைச் சார்ந்த மாணவர்கள், இளைய சமுதாயத்தினர் நம்முடைய அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் உட்காரவைத்து கேட்ட பிறகு அதன் மூலமாக மாநிலக் கல்விக் கொள்கை சில கருத்துகளை இணைத்துள்ளோம். இதை உதாரணத்திற்காக நான் சொல்கிறேன். ஆகவே, இந்த Subject Matter Experts மூலமாக அவர்கள் சொல்லக் கூடிய கருத்துகளையும் உள்வாங்கிக் கொண்டு எதிர்காலத்தில் ஒரு கொள்கை சார்ந்து கொண்டுவருவதாக இருந்தாலும் சரி, ஒரு திட்டம் சார்ந்து கொண்டுவருவதாக இருந்தாலும் சரி, இதெல்லாம் நமக்கு பயனுள்ளதாக இருக்கும். எப்படி நாம் தொலைநோக்குப் பார்வையோடு பார்க்கிறோம் என்பதற்காக சொல்கிறேன்.

**நமக்கான இலக்கு!**

நமக்கான இலக்கு என்பது நம்முடைய இளைய சமுதாயம் வைக்கக் கூடிய அந்தக் கருத்துகளாக இருந்தாலும் நான் சொன்னது போல் Subject Matter Experts சொல்லும் கருத்துகளாக இருந்தாலும், குடும்ப உறுப்பினர்கள் சொல்லும் கருத்துகளாக இருந்தாலும், 2030க்குள் என்னென்ன செய்யலாம் என்பது நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சருக்கு ஒரு visionary document. ஒரு visionary leader ஆல் மட்டும்தான் இதுபோன்று Vision Documentஐ உருவாக்க முடியும் என்பதற்காக இன்றைக்கு அதை செய்யப் போகிறோம்.

15 வயது முதல் 29 வயது வரை இருக்கக் கூடிய இளைய சமுதாயத்தைப் பொறுத்தவரை “நான்கு கருத்துகளை அவர்களிடம் கேட்கப் போகிறோம். அதில் short termஆக இதில் இரண்டை முதலில் செய்யுங்கள். இதை நாங்கள் உங்களிடம் எதிர்பார்க்கிறோம். எங்களுடைய கனவாகப் பார்க்கிறோம் இன்னும் இரண்டு 2030க்குள் செய்துவிடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது” என்று சொல்லும் அளவிற்கு அந்த இளைய சமுதாயத்திடமிருந்து இதை நாங்கள் பெற இருக்கிறோம்.

மாவட்ட ரீதியாக நான் சொன்னதுபோல், அங்கிருக்கின்ற சாதனையாளர்களை உட்கார வைத்து பேசும்போது, 15 நிமிடத்திற்கான ஒரு வீடியோ காண்பிக்கப் போகிறோம். அந்த வீடியோவில் 8 நிமிடத்தைப் பொறுத்தவரைக்கும், நம்முடைய மாநிலம் சார்ந்து நாம் சாதனைகள் செய்திருக்கிறோம் என்பதை மக்களிடம் கொண்டுசெல்லப் போகிறோம். மீதமுள்ள 7 நிமிடத்தில், அந்த மாவட்டம் சார்ந்து நாம் என்ன செய்திருக்கிறோம் என்பதை மக்களிடம் கொண்டுசெல்லப் போகிறோம். மக்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு அவர்களின் வேலை தனிப்பட்ட வேலை கண்டிப்பாக இருந்துகொண்டுதான் இருக்கும். அதே நேரத்தில், ஒரு அரசாங்கம் என்ன செய்கிறது, உங்களை நம்பி நாங்கள் வாக்களித்தேனே இந்த வாக்களித்ததற்கு மதிப்பாக நமக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்பதை அவர்களிடம் சொல்லும் நிகழ்வாகத்தான் இது நடைபெற இருக்கிறது.

இது வருகின்ற 9 ஆம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் “உங்கள் கனவை சொல்லுங்கள்” என்ற திட்டத்தை தொடங்கி வைக்க இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து அந்தந்த மாவட்டங்களில் இது தொடர்ந்து நடைபெறும். 9 ஆம் தேதி முதல் பிப்ரவரி மாதம் வரை 30 நாட்கள் கண்டிப்பாக ஒவ்வொரு குடும்பத்தையும் சென்று பார்க்கக்கூடிய அளவிற்கு எங்களுடைய அதிகாரிகள் தன்னார்வலர்களை தயார்படுத்தி வைத்திருக்கிறோம். வருகின்ற 11ஆம் தேதி முதல் நம்முடைய இளைய சமுதாயம் நான் சொன்னது போல் அந்த இணையதளத்தை நாங்கள் அவர்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டுவந்துவிடுவோம்.

**என் ஊரு - என் கனவு!**

அயலகத் தமிழர்கள் என்று வரும்போது, 12ஆம் தேதி முதல் அந்தக் கருத்துகளை உள்வாங்க இருக்கின்றோம். 9ஆம் தேதி முதல் பிப்ரவரி வரை 30 நாட்களில் நான் சொன்ன மற்ற, அந்த மாவட்டம் சார்ந்த “என் ஊரு என் கனவு” ஆக இருந்தாலும் சரி, அல்லது கருப்பொருட்கள் சார்ந்து நடைபெறும் கருத்தரங்கம் சார்ந்ததாக இருந்தாலும் சரி இந்த ஒரு மாதத்தில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்கே இருக்கின்ற நம்முடைய மக்கள் பிரதிநிதிகள் மூலமாக இதை நடத்த இருக்கின்றார்கள்.

ஆகவே, மீண்டும் நான் சொல்கின்றேன். ஒரு வரலாற்றில் மிகப்பெரிய ஒரு திட்டமாக நம்முடைய மக்களிடமிருந்தே அதை கேட்டுக் கொண்டு அது மக்களுக்கு எப்படி ஒரு திட்டமாக கொண்டு செல்லலாம்... இவ்வளவு செய்து விட்டோம்... ஆனாலும், இன்னமும் மக்களுக்கு ஏதோ ஒரு எதிர்ப்பார்ப்பு இருந்துகொண்டுதானே இருக்கும். அந்த எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்வதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கலாமே எனும் விதத்தில்தான் மீண்டும் அந்த கருத்தை கேட்கும் நிகழ்வாகத்தான் இந்த நிகழ்வை நாங்கள் பார்க்கிறோம்.

ஆகவே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்த நண்பர்கள், முழுமையாக இதை நம்முடைய நாட்டு மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். ஏற்கெனவே, எங்களுடைய அதிகாரிகள் தயார்படுத்தியிருக்கும் தன்னார்வலர்கள் மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும், குடும்பம் குடும்பமாக நாங்கள் செல்ல இருக்கிறோம் என்று சொன்னாலும். இதுபோன்ற ஒரு திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருக்கிறார் என்கின்ற அந்த செய்தியை நாட்டு மக்களுக்கு கொண்டு செல்லும் அந்த பணியை நீங்களும் உங்களை அதில் முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.